INDIAN JOURNAL OF TAMIL | Volume 1 | Issue 4

இந்திய தமிழ் ஆய்விதழ்

Check for updates

RESEARCH ARTICLE

# தமிழகத்தில் சமயப் பண்பாட்டு மாற்றங்கள்

**ர. சுரேஷ்** [அ]

[அ] தமிழ்த்துறை, கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம், கோயம்புத்தூர்- 641021, தமிழ்நாடு, இந்தியா

# Cultural Change that Occurred in the Religion of Tamilakam

**Suresh R** [a, *]

[a] Department of Tamil, Karpagam Academy of Higher Education, Coimbatore-641 021, Tamil Nadu, India.
*Corresponding Author Email: suresh.r@kahedu.edu.in

(Received: 24th August 2020; Accepted: 06th November 2020)
DOI: http://doi.org/10.34256/ijot2041

**Abstract:** The analysis of the religions of Tamilakam should be started from Sangam Age. Though there is no indication of established religion in the Sangam literature, there are plenty of data on established worship patterns. Researchers explain the changes in the social institutions according to the manufacturing relationship. When the social institutions get into changes, the tradition of religious culture too changes accordingly in support of them. As for as Tamil society is concerned, in every age, i.e., from the age of ethnic groups to feudal society, lots of political, economic religious, philosophical and cultural changes have occurred. This paper analyses the interruptions and impacts in the religious cultural tier of Tamils and the specific changes occurred as a result.

**Key Words:** Sangam Age, Religions of Tamilakam, Relationship, Tamil society

## ஆசிரியர் குறிப்பு



**ர. சுரேஷ்**, கற்பகம் உயர்கல்விக் கலைக் கழகத்தின் தமிழ் மற்றும் இந்திய மொழிகள் துறையில் உதவிப் பேராசிரியராக பணியாற்றி வருகிறார். புதியபாணன் எனும் கலை இலக்கிய இதழின் ஆசிரியராகவும் பதிப்பாளராகவும் இருந்து வருகிறார். நவீன இலக்கியங்கள், இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகள் முதலியவற்றில் ஆர்வமும் ஈடுபாடும் உடையவர். படைப்பிலக்கிய பணியிலும் ஆய்வுப் பணியிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார். இவருடைய படைப்புகள் சிகரம், கவிதாமண்டலம், உயிரெழுத்து, புதுப்புனல், திணை, சிற்றேடு, நிவேதிதா, பிரதிலிபி, கீற்று, வல்லமை போன்ற இதழ்களில் வெளிவந்துள்ளன. நவீன கோட்பாட்டு அணுகுமுறையில் பக்தி இலக்கியங்களையும் இந்திய தத்துவவியலையும் ஆராய்ந்து புதுவை மத்திய பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். தொடர்ந்து இந்திய தத்துவங்களையும், தமிழ்ச்சிந்தனை மரபுகளையும் ஆராய்ந்து ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டு வருகிறார்.

## முன்னுரை

மதம் மானுட வரலாற்றின் பண்பாட்டுப் பின்னணிகளைப் பிரதிபலிப்பதாகும். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் மாற்றங்கள் ஏற்படும் பொழுது அச்சமூகத்தினரின் வழிபாட்டு மரபுகளிலும் பண்பாட்டு முறைமைகளிலும் மாற்றங்கள் ஏற்படுவது இயல்பேயாகும். இந்நிலையில் தமிழ்ச் சமுதாயத்தில் பல்வேறு நிலைகளில் அரசியல் பண்பாட்டு, பொருளாதார மாற்றங்களும் அதற்கு ஏற்றவாறு வழிபாட்டு மரபுகளும் மாறியே வந்துள்ளன. அவ்வகையில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள சமய, பண்பாட்டு மாற்றங்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## சங்ககாலச் சமய மரபுகள்

தமிழக சமய மரபுகளைச் சங்ககாலத்திலிருந்தே காண முடிகிறது. சங்க இலக்கியங்கள் அக்கால சமய நிலைகளையும், சமூக நிலைகளையும் பிரதிபலிப்பனவாக உள்ளன. மதங்களின் சமுக அடித்தளத்தை லெனின் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“பழங்காலத்துக் காட்டுமிராண்டி நிலையிலிருந்த மக்கள் இயற்கைக்கு எதிரான தனது போராட்டத்தில் தங்கள் ஏலாத்தன்மையைக் கடவுள்கள், பிசாசு, பூதங்கள் தெய்வீக அற்புத நிகழ்ச்சிகள் இத்தியாதி வகையறாக்கள் மீது தவிர்க்க முடியாத பிற நம்பிக்கைகள் தோன்றுவதற்கு இடமளித்தன. அதைப்போல் இப்போது சுரண்டப்படும் வர்க்கம் சுரண்டும் வர்க்கத்தை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில் தனது ஏலாத் தன்மையின் காரணத்தால் தவிர்க்க முடியாமல் இவ்வாழ்வில் ஏதுமில்லை. இறப்பிற்குப் பிறகு மறு உலகிலாவது சுகம் கிடைக்குமா என்னும் ஏக்கத்தில் மூடநம்பிக்கை தோன்றுவதற்கு இடமளித்துவிடுகிறார்கள்” (Srinivasan A., 2010)

என மதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சிநிலைகளை லெனின் விளக்குகின்றார். மதம் மானுட வாழ்க்கையில் இன்றியமையாத பங்கினை வகிக்கிறது எனலாம். சமூகத்தின் சகல மட்டங்களிலும் மதத்தின் செல்வாக்கு நிலைபெற்றே வந்துள்ளது.

சங்ககால சமூகத்தில் பல்வேறு இனக்குழுக்களும், குடிமரபுகளும் இடம்பெற்றிருந்தன. அவை தத்தமக்குரிய தனிப்பட்ட வாழ்க்கை முறையையும், வழிபாட்டு முறைகளையும் பின்பற்றுவனவாக இருந்தன.

மக்களின் ஒழுக்கக்கூறுகள், பண்பாட்டு வழமைகள் பெரும்பாலும் திணைசார்ந்தே இருந்தன. இயற்கை சார்ந்த அதனோடு ஒன்றிய மாந்தனின் வாழ்நிலையானது, அவ்வியற்கையிலிருந்தே யாவற்றையும் கற்கவும் கற்பிக்கவுமான மனோவியத்தைக் கொண்டிருந்தது. இயற்கையே உணர்வாக, வாழ்வின் உள் இயக்கமாக மாறிப்போன அதன்சாராம்சமே சங்கச்சமூகத்தின் உயிர்ப்பாற்றலாக விளங்கியது. இயற்கையுடனான எதிர்பாடுகளில், அதன் பலதிறப்பட்ட வினோதங்களைப் புரிந்துகொள்ளவியலாத் தன்மையிலிருந்தே அற்றை மனிதனின் ஆன்மீக நம்பிக்கைகள் தோற்றம் கொண்டிருப்பதாக வரையறுக்க இயலும்.

தமிழ்ச்சமூகம் போரை அடியொற்றிய சமூகமாக, மானுட காதலைக் கொண்டாடி மகிழும் காதற் சமூகமாக விளங்கியதைச் சங்க நூற் தொகுதிகள் வாசிக்கப் உணர்த்துகின்றன. போரில் வீரமரணமடைந்த மறவனுக்கு கல் எடுப்பித்துப் போற்றும் நடுகல் வழிபாட்டிலிருந்து பேய், பூதம், சூர், அணங்கு, கொற்றவை எனத் தொடரும் போர்த் தெய்வங்களும், முருகவேல், மால் என வழங்கும் காதல் தெய்வங்களும் சங்ககால வழிபாட்டு மரபுகளில் முன்வைத்து எண்ணத்தக்கவையாகும்.

சங்கத் தமிழர்கள் உலகியல் வாழ்க்கைக்கே சிறப்பிடம் தந்தனர். சமய நம்பிக்கைகள் அதன் ஒரு பகுதியாகத்தான் இருந்தன. நிறுவனமயப்படாத

ஒருங்கமைவற்ற சடங்கியல் தன்மை குறைந்த அல்லது அவ்வளவு முக்கியத்துவம் பெறாத நிலையிலேயே அக்கால வழிபாட்டு மரபுகள் அமைந்திருந்தன. திணைநிலைத் தெய்வங்களாக வளர்ச்சியடைந்த நிலையில் சமய வழக்காறுகள் அவ்வத்திணை மரபுகளோடும், மக்களின் வாழ்வியலோடும் நன்குப் பிணைக்கப்பட்டிருந்தன. ஆயினும் இவை மட்டுமே சங்க நூற்தொகுதிகளில் காணப்படுவதாகக் கொள்ள முடியாது. சங்க இலக்கியப் பாடல்கள் பல்வேறு காலங்களில் வாழ்ந்த பல புலவர்களால் பாடப்பட்டதாகும். பாடப்பட்ட காலம் வேறு தொகுக்கப்பட்ட காலம் வேறு. எனவே இவற்றில் புராதனத் தமிழ்மக்களின் சமய நெறிகளேயன்றி, தமிழ் மரபுகளோடு கலந்த நிலையில் வேறுபட்ட பல சமயங்களும் விளங்கக் காணலாம்.

இதனை, “தமிழரின் நீண்ட, நெடிய தொடர்ச்சியான இனமொழி பண்பாட்டு மரபென்பது கொண்டு தொடுத்தவை செய்து கலப்புமரபாகவும், கூட்டு மரபாகவும் தனக்கேயான தனித்த மரபின் மிச்சசொச்சங்களையும் தாங்கி வந்துள்ள மரபாக உள்ளது” என்று பக்தவத்சல பாரதி கூறுவார். (Bhaktavasalabharathi, 2002)

எனவேதான் தமிழ்ச் சமயமரபில் பழைய தெய்வங்கள் புதிய வடிவிலும் சில புதிய தெய்வங்கள் பழைய வடிவிலும் தோன்றுவதைக் காணலாம். இவற்றையெல்லாம் வரலாற்று ரீதியில் காலவரிசைப்படுத்தி விளங்கிக் கொள்வது சற்று சிரமமாயினும் சமூக மாற்றங்களின் அடியாகப் பகுத்துப் பார்த்தால் சிலவற்றை இனம் காண முடியும். குறிப்பாக ஒரு சமுதாயத்தின் உற்பத்தி முறையைக் கவனித்தால் பிற கூறுகளை அதன் அடிப்படையில் விளக்கிவிடலாம் என்று மார்க்சியர் கருதுவர்.

ஆ. சிவசுப்ரமணியன் சங்க காலத்தில் மூன்று வகையான சமூக அமைப்புகள் நிலவியதாகக் கருதுகிறார்.

1. உணவு தேடி வாழும் இனக்குழு வாழ்க்கை
2. கால்நடை வளர்ப்பினை மையமாகக் கொண்ட மேய்ச்சல் நில வாழ்க்கை
3. உழவு உற்பத்தி செய்யும் ஒருவிதமான நிலவுடைமைச் சமுதாய வாழ்க்கை

மே.து. ராசுகுமார் இரண்டு வகையான சமுதாய அமைப்புகள் இருந்ததாகக் கூறுகிறார்.

1.இனக்குழு அமைப்பு

2.நில உடைமை அமைப்பு. (Durai S., 2000)

சங்க காலம் இனக்குழு வாழ்க்கை அழிந்து நிலவுடைமையாக மலரும் கால கட்டத்தைக் குறிக்கிறது என நா. வானமாமலையும் (ந. வானமாமலை, கலைகளின் தோற்றம் ஆராய்ச்சி, ஜூலை, 1971.) சங்ககாலம் ஒரு மாறுதல் நிலையைக் குறிப்பதாகும் (Vanamamalai Na., 1971). அது இனக்குழு வாழ்க்கை அழிந்து நிலவுடைமையாக மலரும் கால கட்டத்தைக் குறிக்கின்றது என கா. சிவத்தம்பியும் கூறுவர் (Sivathambi Ka., 1994). (சு.துரை, தமிழ் இலக்கிய ஆய்வில் மார்க்சிய நோக்கு, மேற்கோள்:கா.சுப்பிரமணியன், சங்ககாலச் சமுதாயம், ப.100) (Durai S., 2000)

இவ்வாறு சங்கப் பாடல்களினடிப்படையில் அதன் சமூக அமைப்புகள் உற்பத்தி உறவுகளுக்கேற்ப மாற்றம் பெற்றுள்ளதை ஆய்வாளர்கள் விளக்குவர். அதனையொட்டியே சமயநிலைகளில் மாற்றம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது. இவ்வாறு இனக்குழுச் சமூகத்தில் தங்களது தேவைக்கு வேண்டிய உணவுப்பொருட்களை உற்பத்தி செய்யும் நிலையிலிருந்து மாறி உபரி உற்பத்தியும், அதன் விளைவாக ஏற்பட்ட பொருளாதார உறவுகள் குழுத் தலைவர்கள், சிற்றரசர்கள், பேரரசுகள் எனப் படிப்படியாக

வளர்ச்சியடைந்த நிலைகளைக் காணமுடிகிறது.

இனக்குழு மரபில் காதல் நோயை நீக்க அல்லது அணங்கினை அகற்ற வெறியாடும் மரபு சமய மரபாக இருந்தது. இனக்குழு மரபு அழிந்து வீரயுக காலத்தில் அதே மரபு காதல்கடவுளான வேலனைப் போர்க்கடவுளாக உருமாற்றியது. பின்பு நிலவுடைமைச் சமுதாயத்தில் (மருதநிலத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தில்) வேலன், முருகனாகப் பரிணமித்து வளர்ச்சி பெறுவதைத் திருமுருகாற்றுப்படை, பரிபாடல் போன்ற சங்க நூல்கள் தெளிவாகத் தெரிவிக்கின்றன.

இக்கால கட்டத்திலேயே வேத வழிப்பட்ட, ஆரிய மதப்பண்பாடும் தமிழ் சமயப் பண்பாட்டில் ஒரு உபபண்பாடாக வளர்ந்து வந்துள்ளதையும், தனது மேலாண்மையைக் கட்டமைக்க முற்படுவதையும் உணர முடியும். தமிழ் சிறுதெய்வங்கள் பல ஆரிய தெய்வங்களோடு இணைவாக்கம் பெற்று வைதீக மரபிற்குள் உள்வாங்கப்பட்டன. சிவன்-ருத்ரனாகவும் மால்-விஷ்ணுவாகவும் கொற்றவை-உமாதேவியாகவும், வேலன்(முருகன்) - ஸ்கந்தனாகவும் வைதீக மரபோடு பிணைக்கப்பட்டு ஆரிய மேலாண்மைக்கு உட்படுத்தப்பட்டன. சிவன், மால் ஆகிய தெய்வங்கள் தமிழ் தொல் சமய மரபிற்குள் இடம் பெறவில்லையென்றாலும் இவை பின்னர் ஆரியரல்லாத மக்களின் வழிபாட்டு மரபோடு, கொண்டு கொடுப்பினைகள் மூலம் தமிழ்த் தெய்வங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டவையாகும். இங்கு ஆரியர் ஆரியரல்லாதார் முரண்பாடு இனரீதியான அடையாளமாகவன்றி பண்பாட்டு அடையாளமாகவே பதிவு செய்யப்படுகிறது.

பழந்தமிழர் சமய வாழ்க்கையில் ஆரிய வைதீக மத ஊடுருவல் மட்டுமேயன்றி பிற சமய நெறிகளும் புழக்கத்தில் இருந்தன. சங்கப் புலவரான மாங்குடி மருதனாரால் பாடப்பெற்ற மதுரைக்காஞ்சியில் கபாலிகம், வைதீகம், ஆசிவகம் முதலிய சமயங்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆசிவகம்

ஆசிவகம் ஊழ்வினைக் கோட்பாட்டை, நியதிக் கோட்பாட்டை உடையதாகும். இக்கோட்பாட்டைப் பற்றி முழுமையாக ஆராய்ந்த ஏ.எல். பாசம் "ஆசிவகம் அழிந்துபோன ஒரு இந்திய சமயம்" எனும் தலைப்பில் எழுதிய நூல் குறித்து முனைவர் க. நெடுஞ்செழியன் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"ஆசிவகத்தின் தோற்றுநர் நிறுவனராகிய மற்கலிகோசர் மகத நாட்டவர் என்று கருதும் ஏ.எல்.பாசம் ஆசிவகத்தின் வேர்கள் தமிழகத்தில் இருப்பதாகத் தெளிவுபடுத்துவார். வடநாட்டைச் சேர்ந்த ஒருவர் உருவாக்கிய ஒரு சமயத்தின் வேர்கள் மட்டும் எப்படித் தமிழ்நாட்டில் இருக்க முடியும் என்பதற்கான காரணத்தை அவர் தெளிவுபடுத்திக் கூறவில்லை. மேலும் ஆசிவகத்தை உருவாக்குவதில் பங்குபெற்ற கணியாரா என்பவரைப் பற்றியும், இவர் குறித்த செய்திகள் எவையும் பாலி, அர்த்தமாகதி, சமஸ்கிருதம் ஆகிய மொழி இலக்கியங்களில் காணப்படவில்லை என்பதையும் அவர் புலப்படுத்துகிறார். அத்துடன் ஆசிவக மரபுப்படி கழிவெண் பிறப்பைக் கடந்து வீடடைந்த மூவருள் மற்கலியை அடுத்து வரும் இச்சாங்கிசா, நந்தவாச்சா ஆகிய இருவரைப் பற்றியும் கூட அவரால் அடையாளம் காண இயலவில்லை. தமிழ் இலக்கியங்களில் அவருக்குப் பயிற்சி இல்லாமையே இதற்குக் காரணமாகும். எனினும்கூட ஆசிவகத்தின் வேர்கள் தமிழ் இலக்கியங்களில் நிலை கொண்டுள்ளன எனும் அவரின் கருத்து அவரின் ஆய்வு நெறியின் மேன்மைக்கு, நுண்மாண் நுழைபுலத்திற்கு மிகச் சிறந்த சான்றாகும்" (Nedumaran Pazha., 2006)

இவ்வாறு ஏ.எல் பாசம் தெளிவுபடுத்தாத சங்ககால ஆசிவகப் பிரிவைச் சேர்ந்த புலவர்களை க. நெடுஞ்செழியன் அடையாளம் காட்டுகிறார். பக்குடுக்கை நன்கணியார்,

நரிவெரூவுத்தலையார், பூரணகாயபர் எனும் மதுரை ஓலைக்கடையத்தனார் ஆகியோரில் கணியாரா என்பது பக்குடுக்கை நன்கணியாரையும், கிச்சிங்கா என்பது பூரணகாயபரையும் குறிக்கிறது என அவர் கருதுகிறார்.

மேலும் சங்ககால மூவேந்தர்கள் வெளியிட்ட நாணயங்களில், ஆசிவகத்தின் குறியீடான யானை, சுவஸ்திகம், கும்பம், மத்தளம், திருமறு போன்ற உருவங்கள் இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிடுகின்றார்.

அறிவியல், அணுவியல், கடவுள் மறுப்பு, வேதமறுப்பு வருண எதிர்ப்பு ஆகிறவற்றை அடிப்படையாகக் கொண்ட ஆசிவகம் தமிழ்நாட்டின் தேசிய சமயமாகக் திகழ்ந்திருக்க வேண்டும் என முனைவர் க. நெடுங்செழியன் கருதுகிறார். பிற்கால சமய, அரசியல் போராட்டங்களால் ஆசிவகம் தாக்குப்பிடிக்க முடியாமல் வழக்கொழிந்துவிட்டது எனலாம்.

## கபாலிகம்

கபாலம் என்பது சிவன் ஆடிய பலவகை ஆடல்களுள் ஒன்றாகும், பிரம்மனது தலையினைக் கையிலேந்தி, கொற்றவை ஒருபால் நிற்க, திரிபரம் எரித்த வெற்றியின் அடையாளமாக ஆடிய ஆட்டமே கபாலம் ஆகும். அதனை கே.கே.பிள்ளை கீழ்க்கண்டவாறு கூறுவார்.

“பார்வதி காளி வடிவில் மண்டையோடுகளை மாலையாக அணிந்து குருதி வேட்கையுடன் அருகில் நிற்க, சிவன் தன் கையில் கபாலம் ஏந்தி ஆடிய ஆட்டம்” என்பார் க. நெடுஞ்செழியன், (Nedunchezhiyan K., 1990) மேலும் கலித்தொகையில்,

“கொலையுழுவைத் தோலனஇக் கொன்றைத்தார் சுவர்புரளத்

தலையங்கைக் கொண்டுநீ காபாலம் ஆடுங்கால்

முலையணிந்த முறுவாள் முதற்பாணி தருவாளோ” கலித்தொகை, பா 1:12

என்று குறிப்படப்பட்டுள்ளது. இவ்வாறு சிவனின் ஆடற்கோலத்தை கொற்றவை இருக்கச் சிவன் ஆடிய ஆடற்காட்சியாக இப்பாடல் விளக்குகிறது. எனவே கபாலிக வழிபாடு தமிழகத்தில் இருந்துள்ளதை அறிய முடிகிறது. வைதீகத்தின் உட்பிரிவுகளுள் ஒன்றான இக்கபாலிகம் வைதீக மதத்தவரால் இழிவாகக் கருதப்பட்டது. சூத்திரர்க்கு உரியது என வரையறுக்கப்பட்டது. இவர்கள் வேதத்தை முக்கியத்துவமானதாகக் கருதுவதில்லை. எனவே இவர்கள் வைதீகர்களால் நாத்திகர்கள் என்று புறந்தள்ளப்பட்டவர்களாவர்.

## வைதீகம்

வேதத்தை அடிப்படையாகக் கொண்டதும், வேள்விக் கோட்பாட்டை உடையதும், பிராமணிய மேலாண்மையைப் போற்றுவதும் வைதீகச் சமயமாகும். இந்தியாவிற்குள் நுழைந்து குறிப்பாக சிந்துவெளிப் பரப்பில் அங்குள்ள பூர்வ குடிகளை அழித்து உருவான மரபாகும். பூர்வ குடிகளின் வழிபாட்டு முறைகளைக் கணிசமான அளவு உட்செறித்துக் கொண்டு வளர்ந்து வந்துள்ள வைதீக சமயத்தின் கட்டமைப்பிற்குப் புராணங்கள், தொன்மங்கள், இதிகாசங்கள் பெரிதும் பயன்பட்டன. வைதீக மதப் பரவலாக்கத்திற்கு இவையே பெரிதும் துணைநின்றன. இவ்வாறான புனைவுகளின் வழியாகவே வைதீக மரபு தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது.

தமிழகத்தைப் பொருத்தவரை சங்ககாலம் முதற்கொண்டே இவ்வைதீக மரபு ஊடுருவிக் காணப்படுகிறது. முன்பே கூறியதுபோல, தமிழ்ப்பாண்பாட்டில் ஒரு உப - பண்பாடாகத் தொடர்ந்து இருந்து வந்துள்ளது. அதே சமயத்தில் மொழிரீதியாகவும்

இனாரீதியாகவும் பண்பாட்டுரீதியாகவும் தனது சமய ஆதிக்கத்தையும் அதன்வழி சமூக அதிகாரத்தையும் தக்க வைத்துக் கொள்ளும் முயற்சியிலும் ஈடுபட்டிருக்கிறது. எனினும் அவை உயர்குடியினர் மத்தியில் பெற்றிருந்த செல்வாக்கு அளவிற்கு வெகு மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை. அது ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையில் சமூகத்தை வரையறை செய்கின்ற குறுகிய நோக்கமுடையதாகவும், அதன் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஆற்றல் உயர்குடி செல்வந்தர்களிடம் மட்டுமே இருந்தமையும் அதற்குக் காரணமாகும்.

## சமணம்

சமண மதம் புத்தரது காலத்திற்கு முன்பே தோன்றியதாகும். இதனைத் தோற்றுவித்தவர் மகாவீரர். இவரே கடைசி தீர்த்தங்கரராகக் கருதப்படுகிறார். அகிம்சையே இவர்களது தலையாயக் கொள்கையாகும். இவர்களுள் சுவேதம்பரர்கள் (வெள்ளை ஆடைகளை அணிபவர்கள்) என்றும் திகம்பரர்கள் (திக்குகளை ஆடையாக அணிபவர் அதாவது நிர்வாணமாக இருப்பவர்) என இரு பிரிவினர் உண்டு தமிழகத்திற்கு வந்த சமணர்கள் திகம்பரர்களே ஆவர். வேள்வியை மறுத்தும் வர்ணாசிரமத்தை எதிர்த்தும் சமூகத்தில் நிலவுகின்ற ஏற்றத்தாழ்வுகளைக் கண்டித்தும் அறக்கருத்துக்களைப் போதித்தனர். வட்டாரமொழிகளுக்கு ஆதரவளித்தனர்.ஆ. வேலுப்பிள்ளை,

“வட இந்தியாவில் உயிர்ப்பலியிட்டு யாகங்கள், வேள்விகள் செய்து அவற்றின் பலத்தினால் கடவுளிடமிருந்து வரங்களைப் பெறலாம் என்ற கருத்துடைய வேதநெறியே ஆதிக்கம் பெற்றிருந்தது. பூவுலகத்துத் தேவர்களெனக் கருதப்பட்ட பிராமணர், மக்கள் அறியாத சங்கத மொழியையே சமய காரியங்களுக்கு உபயோகித்து வந்தனர். இத்தகைய வைதீக சமயத்துக்கு எதிராகப் புரட்சி செய்த மாவீரரும், புத்தரும் அகிம்சை நெறியைப் போற்றித் தூய வாழ்க்கை நடத்தினாலே மனிதன் உய்தி பெறலாம் என்று உபதேசித்தனர். சங்கத மொழியைத் தேவ பாஷையெனப் பிராமணர் கூறியதை நிராகரித்து, மக்கள் பேச்சு வழக்கிலிருந்த பிராகிருதம், பாலி முதலிய மொழிகளையே முறையே இருவரும் பயன்படுத்தினர்” (பழ.நெடுமாறன். உருவாகாத இந்தியத் தேசியமும்உருவான இந்து பாசிசமும், ப.56) (Nedumaran Pazha., 2006) என்று கூறுகின்றார்.

வட்டார மொழிகளைப் பயன்படுத்தியதோடு, இனக்குழுப் பண்பாட்டு மரபுகளையும் ஆதரித்து வந்தனர். வடஇந்தியாவில் தோன்றித் தென்னாட்டில் பரவிய மதங்களுள் சமணமும் ஒன்று. தமிழ்நாட்டைப் பொருத்தவரை கி.மு.3-ஆம் நூற்றாண்டில் அசோகரின் பாட்டனான மௌரிய அரசன் சந்திரகுப்தனின் குருவாக இருந்த பத்ரபாகு முனிவர் கர்நாடகத்தில் உள்ள ‘சிரவணபௌகொள’ என்ற மடத்தில் தங்கித் தனது சீடரான விசாக முனிவரைக் கொண்டு தமிழ்நாட்டில் சமணத்தைப் பரப்பச் செய்தார். அவர் முதலில் கொங்கு நாட்டிலும் பிறகு சோழ, பாண்டிய நாடுகளிலும் சமணத்தைப் பரப்பினார். எனவே கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே சமணம் தமிழகத்தில் பரவத் தொடங்கிவிட்டது எனலாம்.

## பௌத்தம்

சமணத்தைப் போலவே பௌத்தமும் வேத நிராகரிப்பு வேள்வி மறுப்பு வர்ணாசிரம எதிர்ப்பு எனச் சகல மட்டங்களிலும் வைதீக சமயத்தை எதிர்த்துத் தோன்றிய எதிர்மரபாகும். கௌதம புத்தரால் தோற்றுவிக்கப்பட்ட இம்மதம் ஹீனயானம், மகாயானம் எனும் இருபிரிவுகளையுடையது. ஹீனயானம் தேராவாத பௌத்தம், பூர்வபௌத்தம் எனவும் வழங்கப்படுகிறது. வரலாற்றின் எல்லா காலங்களிலும் தொடர்ந்து விவாதிக்கப்பட்டும் விரும்பப்பட்டும் வந்த மதம் பௌத்தமாகும்.

உலகின் முதல் ஒழுங்குபடுத்தப்பட்ட சமயம் பௌத்தமே என்று அறிஞர்கள்

கருதுவர். தனக்கான கொள்கைகளையும் கோட்பாடுகளையும் சமயம் என்பதன்கீழ் போதித்த வந்த பௌத்தத்தின் கொள்கைகள் ஒரு மதத்திற்கானது என்பதை விட ஒட்டுமொத்தச் சமூகத்திற்குமான மனிதார்த்தக் கொள்கைகளை உடையது எனக் கொள்வது பொருந்துவதாக இருக்கும். மகாயான பௌத்தத்தைப் பற்றி தர்மதீர்த்த அடிகளார் கீழ்க்கண்கண்டவாறு குறிப்பிடுவார்.

“பிராமணர்களின் தலைமையில் பிரிந்து சென்ற புத்தமதம்தான் மகாயான புத்தமதம், அவர்கள் பல்வேறு வகையான மந்திர தந்திரங்களை அதன் பகுதியாக்கி மாற்றினார்கள். புத்தரும் காளிதேவியும் ஒன்றுதான் என்ற மூடநம்பிக்கையையும் அவர்கள் பரப்பினார்கள். மந்திரவாதம், பெண்பூசை போன்றவற்றையும் மகாயான புத்த மதத்தின் ஒரு அங்கமாக அவர்கள் உருவாக்கினர். நாளந்தா பல்கலைக்கழகத்தில் மகாபுரோகிதராக இருந்த நாகார்ஜீனர் என்ற பிராமணர் இந்த மகாயான புத்த மதத்தின் தலைவர்களில் ஒருவராக இருந்தார். இவ்வாறு புத்தமதம் பலகீனப்படுவதற்குப் பிராமணர்களே காரணமாக இருந்தனர். இது மத்திய கால வடஇந்தியாவில், விஷ்ணுவின் பத்து அவதாரங்களில், ஒன்றாவது அவதாரமாகப் புத்தரைக் கொண்டு செல்லும் நிலைவரை சென்றது என்றும், பௌத்தம் தனது தனித்தன்மையே இழந்து பிற்போக்குத்தனமான இந்து மதப்பிரிவுகளில் ஒன்றாகச் சுருங்கிப் போனது என்றும், இந்தியாவில் முளைவிட்ட ஏனைய மதங்கள் போன்று, உயிர்வாழும் போராட்டத்தில் தோல்வியுற்று, இந்தியாவில் பௌத்தம் அழிந்தது என்றும் ஏ.எல்.பாஷம் கூறுவார். (Tharmathirtta Atikalar, & Balakrishnan V.K., 2009)

தென்னாட்டில் வெகுவாகப் பரவிய பௌத்தம் மகாயான பௌத்தப் பிரிவாகும். இது புத்தரையே தெய்வமாக வணங்கித் தொழும் ஒருபிரிவாக வளர்ந்து வந்தது. தமிழகத்தில் பௌத்தம் பற்றி ஆழமான ஆய்வுகளை மேற்கொண்டவர்களில் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் முக்கியமானவர் ஆவார். அவர் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட அசோக மன்னனின் கல்வெட்டுகள் இரண்டில் தமிழ்நாட்டிற்குப் புத்தத் துறவிகள் அனுப்பப்பட்டது பற்றிய குறிப்புகள் உள்ளதாகக் குறிப்பிடுவார்.

மேலும் தேரவாத பௌத்த மதப்பிரிவும் தமிழகத்தில் பரவியிருந்தது என்பதை, “‘யுவான் சாங் காலத்தில் தமிழ்நாட்டில் நிலவிய பவுத்தம் தேரவாதமாகும். தேரர்கட்கு நூறு சங்காராமங்கள் உண்டு, தேரர் பத்தாயிரவருக்குக் குறையார். தியானவாதம் என்றொரு பிரிவும் தென்னாட்டு பவுத்தத்தில் உண்டு. இதனை கி.பி. 527-இல் முதன்முதலாகச் சீனநாட்டுக்குக் கொண்டு சென்றவன் போதிதருமன் என்னும் காஞ்சி நகர வேந்தனொருவனுடைய மூன்றாம் மகன்” என்று ஔவை சு. துரைசாமிப்பிள்ளை கூறுவார். (Duraiswamy Pillai S., 1978)

## தமிழகத்தில் சமண - பௌத்த மதப்பரவலின் சமூகப் பின்புலம்

சங்க இலக்கியங்களில் சமண பௌத்த அறக்கருத்துக்கள் பரவலாக இடம்பெற்றிருந்தாலும் சமண பௌத்தம் செல்வாக்குற்ற காலம் சங்க மருவிய காலமாகும். பதினென் கீழ்க்கணக்கு நூல்கள் முழுமையும் அறக்கருத்துகளே நிரம்பியுள்ளதைக் காணமுடிகிறது.

சங்கம் மருவிய கால நூல்களில் அறம் முதன்மைப் பொருளாகக் கருதப்பட்டது. சங்ககாலச் சமூகநிலை பெரிதும் மாறியது. இனக்குழுக்கள் அழிந்து பேரரசுருவாக்கச் சூழல் நிலவியது. அதன் விளைவாகத் தனியுடைமை வளர்ச்சி பெற்றது. எனவே அதனைப் பாதுகாக்க அறநூல்கள் பெருகின. இச்சூழலில் சமணம் பௌத்தம் தமிழ்ச் சூழலோடு பொருந்திப் போகின்ற நிலை ஏற்பட்டது. அச்சமயங்கள் வலுப்பெற்றன.

உற்பத்தி உறவுகளின் அடிப்படையில் அறக்கருத்துக்கள் தோன்றுகின்றன. அவ்வாறு

உருவாகும் அறக்கருத்துக்கள் உடைமைச்சமூகத்திற்கு ஆதரவானவையாகவே இருக்கும். இதனை “குழுச் சமுதாயத்திலிருந்து உடைமைச் சமூக உருவாக்கம் பெற்றபோது அறநெறிக் கருத்துக்கள், முழு சமுதாயத்தின் மதிப்பீடுகளை எதிர்மறைகளாக்கி உடைமைச் சமூகத்திற்கான ஒரு ஒழுக்கவியல் சட்டத்தை ஏற்படுத்தித் தந்திருக்கிறது என்பார் ராஜ்கவுதமன். (Rajgowthaman, 1995)

இவ்வாறு எந்த ஒரு கலைப்படைப்பும் வர்க்கச் சார்பாகவே இருக்கும் என்பதை பெரும்பாலான மார்க்சியர் முன்வைக்கின்றனர். சங்க மருவிய கால அற இலக்கியங்களும், நிலவுடைமை வர்க்கத்திற்கு ஆதரவாகவும் வணிக வர்க்கத்திற்கு ஆதரவாகவும் செயல்பட்டுள்ளதாக இருவேறு கருத்துகள் உள்ளதை அறிஞர்களிடையே காணமுடிகிறது.

அதே போல் சமண பௌத்த அறங்களின் ஒரு கூறான பார்ப்பனிய எதிர்ப்பு, வேதாந்த, வர்ணதர்ம நெறிகளுக்கு எதிரான கருத்துக்களும் முக்கிய இடம் பெற்றிருப்பதையும், திருக்குறள் முதலிய நீதிநூல்கள் வழி அறிய முடிகிறது. பின்வந்த காப்பிய காலங்களில் இவ்விரு சமயங்களும் மேலாண்மைப் போட்டியில் ஒன்றையொன்று மறுத்தும் எதிர்த்தும் வந்துள்ளதைக் காப்பிய இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது.

## சைவம்-வைணவம்

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டது சைவ சமயம் எனவும் விஷ்ணுவை முழுமுதற் பொருளாகக் கொண்டு வழிபடுவது வைணவ சமயம் எனவும் அழைக்கப்படுகின்றன. சிவவழிபாடு குறித்து சங்க இலக்கியங்களில் பதிவாகவில்லை. சிவன் பற்றிய புராணக் குறிப்புகளின் வழியேதான் சிவனை அறியமுடிகிறது.

சிவன் என்ற பெயர் சங்க காலத்தில் வழக்கில் இல்லை. மணிமேகலையில் தான் “சைவம்” என்ற சொல் வழக்கு முதன்முதலாகக் காணப்படுகிறது. வஞ்சி மாநகரில் மணிமேகலை சந்தித்த பல சமயவாதிகளுள் சைவவாதியும் ஒருவன். திருமால் பற்றிய கருத்துக்களும் சங்க நூல்களில் அதிகம் பேசப்படவில்லை. இந்நிலையில் கி.பி.ஏழாம் நூற்றாண்டு முதல் இவை நிறுவனமயப்படுத்தப்பட்டு சைவம் வைணவம் எனும் இரு பிரிவுகளாக அமைப்பாக்கம் பெறுகின்றன. நாயனமார்களும் ஆழ்வார்களும் இதனைப் பரப்புரைச் செய்வதில் முழு மூச்சாகச் செயல்படுகின்றனர். சைவ வைணவ நிலைப்பாடுகள் வெறும் இறைநிலைப்பட்டது மட்டுமன்று. அக்காலத்திய சமூக-அரசியல்-பண்பாட்டுப் பரிமாணம்’ அதற்கு உண்டு என்பதைப் பின்வரும் சோழர்கால வரலாறு கூறும். சோழர் ஆட்சி நிலைப்புக்குத் தக்க சித்தாந்த மெய்யிலைப் பெற்றுத்தரும் வகையில் சைவ வைணவம் வைதீக சமயங்களாக நிலைமாற்றமடைந்தன. இவற்றுள் வைணவத்தைவிடவும் சைவமே அதிகம் வைதீகத்திற்கு ஆட்படுத்தப்பட்டது.

“ஒரு பேரரசு உருவாகின்ற போது அதற்கும் சார்பான தத்துவ அமைப்பொன்றும் உருவாக வேண்டும். ஆயுத பலத்தின் வழியாகப் பெற்ற அதிகாரமும் உடைமைகளும், சமூகத்தை மேல் கீழ் அடுக்குகளாய் பிரித்துவைக்கும், பாதிக்கப்பட்ட மக்கள் சமூகம் இந்தப் பிரிவினைகளை எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளுமாறு மறுதரப்பில் சமயம் சார்ந்த சிந்தனை ஒன்று சமூக உளவியலை வடிவமைத்தாக வேண்டும். சோழ அரசு ஒரு பேரரசாக உருவாகும்போது அந்தப் பணியினைத் தமிழ்நாட்டில் சைவ சமயம் திறம்படச் செய்தது என்பதனைப் பேரா.க.கைலாசபதி ‘பேரரசும் பெருந்தத்துவமும்’ என்ற கட்டுரையில் எடுத்துக் காட்டியுள்ளார்’ (Kailasapathy K., 2011)

மேற்கண்ட சமயம் சார்ந்த சிந்தனைப் பின்புலம் என்பது சோழப் பேரரசைப் பொருத்தவரை வைதீகக் கருத்தியலை அதன் மேலாண்மையை அடிப்படையாகக்

கொண்டு இருந்தது. இதனை,

"சோழப் பேரரசுருவாக்கத்திற்குத் துணை நின்றது, திருமூலருக்கு முந்திய சைவநெறிகளோ, மெய்கண்டார் எடுத்துரைத்தச் சைவ சித்தாந்தமோ அல்ல. உண்மையில், அன்றிருந்த சைவப் பிரிவுகளில் ஒன்றான லகுலீச பாசுபதத்தினை முன்னிறுத்திக் கொண்டு வைதீகமே (வேதத் தலைமையும் பிராமண மேலாண்மையும்) சோழ அரசின் ஆக்கத்துக்குத் துணையாக நின்றன" தொ. பரமசிவன் என்று கூறுகிறார் (Paramasivan T., 2014).

இதிலிருந்து சைவம் வைதீக ஆதிக்கத்துக்கு உட்படுத்தப்பட்டதையும் அதுவே சோழப் பேரரசுக்கு உகந்த தத்துவார்த்தத் தளமாக அமைந்தது என்பதையும் அறியலாம். பிற்காலச் சமய அறிஞர்கள் தமிழ் சைவ நெறி நின்று தத்துவ விளக்கம் அளித்துள்ளதையும் அது 'சைவ சித்தாந்தமாக வளர்ச்சியடைந்துள்ள நிலையையும் காணமுடிகிறது.

## முடிவுரை

தமிழகச் சமய மரபுகளை அதன் சமூகபின்புலங்களைக் கருத்தில் கொண்டு ஆராயும் பொழுது, பல்வேறு சமய ஊடாட்டங்கள் நிகழ்ந்துள்ளமையையும், பல சமயக்கூறுகளும் தமிழ் பண்பாட்டின் உபகூறாக இணைவாக்கம் பெற்றுள்ளதையும் அறியமுடிகின்றது. சங்ககாலச் சமய நம்பிக்கைகள் திணை மரபுகளோடும், மக்களின் பொருளியல் வாழ்வோடும் நன்குப் பிணைக்கப்பட்டிருந்தன என்பதை அறியமுடிகின்றது. இனக்குழு சமூகம் அழிந்து நிலவுடைமை தோற்றம்பெறும் பொழுது உற்பத்தி உறவுகளில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப வழிபாட்டு முறைகளிலும், சமய பண்பாடு வழமைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. வைதீகம், ஆசிவகம், காபாலிகம், சமணம், பௌத்தம் போன்ற பல்வேறு சமயங்களின் இடையீடுகளும் தாக்குறவுகளும் தமிழ்ச்சமூகப் படிமலர்ச்சியின் ஒவ்வொரு காலகட்டத்திலும் செல்வாக்கு செலுத்தியுள்ளன என்பது புலப்படுகின்றது.

## References


Bhaktavasalabharathi, (2002) Tamil Anthropology, Meiyappan Tamil Research Institute, Chidambaram-08.

Durai S., (2000) Marxist Perspective in Tamil Literature, Kavya, Chennai.

Duraiswamy Pillai S., (1978) History of Saiva Literature, Annamalai University, Chidambaram.

Kailasapathy K., (2011) Ancient Tamil Life and Worship, Kumaran Book House, Colombo-Chennai.

Nedumaran Pazha., (2006) Undeveloped Indian Nation and Emerging Hindu Fascism, Tamil Kulam Pathipalayam, Chennai-04.

Nedunchezhiyan K., (1990) Ulagaitham in Tamil Literature, Paari Nilayam, Chennai.

Paramasivan T., (2014) Politics of Religions, 2nd edition, Vikatan Pamphlet, Chennai.

Paramasivan T., (2014) Politics of Religions, 2nd edition, Vikatan Pamphlet, Chennai.

Rajgowthaman, (1995) Lies + Absurdity - Truth, Vilimbu Trust, Coimbatore.

Sivathambi Ka., (1994) Religion and Humanity in Tamil Literature, New Century Book House, Chennai.

Srinivasan A., (2010) On Religion Lenin, Pavai Publications, Chennai-14.

Tharmathirtta Atikalar, Balakrishnan V.K., (2009) Intumatak koṭuṅkōṉmaiyiṉ varalāṟu, Salaram Publication, Chennai-69.

Vanamamalai Na., (1971) Tamil Culture and Philosophy, New Century Book House (P) Ltd., Chennai-2.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License